**வெலிக்கந்த பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வெலிக்கந்த பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் வெலிக்கந்த பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட மேலதிகம் 02 இன் பிரகாரம் மூலதன புத்தகங்கள் நடைமுறைச் சொத்தின் கீழ் கணக்கீடு செய்வதற்கான வழிகாட்டல் காணப்பட்ட போதும் சபையினால் நூலகப் புத்தகங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நூலக புத்தகங்களை நடைமுறைச் சொத்தின் கீழ் கணக்கீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபை நிதி நிர்வாகத்திற்குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான விதி இலக்கம் 96 இன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | இந்த ஆண்டு முதல் முன்னைய ஆண்டிற்குரிய ஒப்பீட்டு ரீதியான தகவல்களை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட மேலதிகம் 02 இன் EG 2.7 மூலதன செலவின மானியத்தின் கீழ் அரசாங்கத்திடமிருந்தும், உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்தும் கிடைத்த சகல மானியங்கள் தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தின் கீழ் திறக்கப்பட வேண்டிய புதிய கணக்கில் வரவு வைக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் கிடைத்த ரூபா 13,765,826 மூலதன மானியம் நிதிக்கூற்றுக்களில் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) LDSP செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது சபைக்கு கொள்வனவு செய்யப்பட்ட 06 நிலையான சொத்து விடயங்களின் ரூபா 1,688,078 பெறுமதி மற்றும் 15 நடைமுறைச் சொத்து விடயங்களின் ரூபா 1,822,260 பெறுமதி என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சகல சொத்துக்களும் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. | சகல சொத்துக் களினதும் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மீள் நீர் வடிகட்டியின் பெறுமதி ரூபா 935,000 சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துப் பதிவேட்டில் இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணத்தின் கீழ் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. | சொத்துக்களை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முன் மாவட்ட காணிப் பதிவாளர் அலுவலகத்திடம் விசாரணை செய்து சபைக்குரிய வருமானங்களை இனங்காணாமையின் காரணமாக | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்ற திகதி வரையிலும் உரிய தகவல்கள் கிடைக்கப் பெறாதிருந்தமையால் அதற்குரிய மதிப்பீடு | வருமானங்களை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 2,836,000 ஆக இருந்த போதும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட பெறுமதி ரூபா 306,000 ஆனமையால் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 2,530,000 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | செய்யப்பட்ட தொகை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | |
| (உ) | மீளாய்வாண்டின் போது புதிய நீர் இணைப்புக்களை வழங்குவதற்காக செலவிடப்பட்ட ரூபா 1,068,500 செலவினம் மூலதனமாக்கப்படாமல் செலவினமாக பதிவழிக்கப்பட்டிருந்தது. | ரூபா 1,068,500 செலவினம் பீவீசீ குழாய்கள் கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த செலவினம் 2021 இன் பாதீட்டின் கீழ் மீண்டெழும் செலவினமாக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதனால் இந்த செலவினம் மீண்டெழும் செலவினமாக குறிப்பிடப்பட்டுள்ளது. | மூலதன செலவினம் மற்றும் மீண்டெழும் செலவினங்களை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஊ) | கொவிட் கட்டுப்பாட்டு அழைப்பு நிலையத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 36,395 தொகையான தொலைக்காட்சி இயந்திரம் மற்றும் துணைப்பாகங்களும், 2021 ஒக்தோபர் மாதத்தின் போது கொள்வனவு செய்து களஞ்சியத்தில் வைக்கப்பட்ட ரூபா 316,000 பெறுமதியான 08 டெப் இயந்திரங்களும் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 32,950 பெறுமதியான தொலைக்காட்சி இயந்திரம் நிலையான சொத்துப் பதிவேட்டில் இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணத்தின் கீழும், 2021 ஒக்தோபர் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியத்தில் வைக்கப்பட்ட 08 டெப் இயந்திரங்கள் கணனி துணைப்பாகத்தின் கீழும் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. | சொத்துக்களை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (எ) | 2021 ஆம் ஆண்டிற்காக அமுல்படுத்தப்பட்ட 03 செயற்திட்டங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைப் பெறுமதி ரூபா 1,921,346 நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தது. | நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளின் பெறுமதியை எதிர்காலத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,894,878 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 882,185 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நெலும்வெவ கிராமத்தில் வாராந்த சந்தை நிலத்தில் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 1,236,921 பெறுமதியான உக்காத கழிவுப்பொருள் களஞ்சியம் தொடர்பான விபரங்கள் பிரதேச சபையின் ஏடுகளுக்கு கொண்டுவரப்படாதிருந்ததுடன் வாராந்த சந்தைக்காக நிர்மாணிக்கப்பட்ட 03 கட்டிடங்கள் மற்றும் கழிவுப்பொருள் களஞ்சியம் என்பன 2022 ஆகஸ்ட் வரையிலும் திட்டமிடப்பட்ட செயற்திட்டம் அமுல்படுத்தப்படாமையின் காரணமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்ட செயற்திட்ட அறிக்கையின் மூலம் உரிய கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை பதிவேட்டிற்கு கொண்டு வருவதற்கும், பயன்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது 04 தொழிலாளர்களுக்கும், 02 இயந்திர உபகரணங்களுக்கும் முறையே ரூபா 948,700 மற்றும் ரூபா 354,053 செலவினத்தை செய்து சபை அதிகாரப் பிரதேசத்தில் வருடாந்தம் உருவாகின்ற 312 தொன் அளவிலான கழிவுப்பொருள் அளவினை சபைக்குச் சொந்தமான எத்துகலயில் அமைந்துள்ள அகற்றும் நிலத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்த போதிலும் உக்கும் கழிவுகளை பயன்படுத்தி சேதனப் பசளையை உற்பத்தி செய்வதற்காக கழிவுப் பொருள் முகாமைத்துவ திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தினந்தோறும் அகற்றப்படுகின்ற கழிவுப்பொருட்கள் வாரத்திற்கு ஒரு தடவை கொண்டு செல்லப்படுகின்றது. | சுற்றாடலுக்கும் வன விலங்குகளுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |